DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 148/2023 PW : 1

Name : சுரேஷ் Age :47

S/o : கோபால் Village :

Taluk :

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 20.07.2026

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) பிரதிவாதி என்னுடைய இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியும். என் தாத்தா புருஷோதமன் ஆச்சாரிக்கு 3 பெண் பிள்ளைகள், 4 ஆன் பிள்ளைகள். அதில் என் தந்தை கோபால் ஆச்சாரி 4ம் பிள்ளை, இந்த வழக்கின் பிரதிவாதி மணி ஆச்சாரி 5ம் பிள்ளை. நான் தற்போது பேரம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் 2, 3 வயது முதலே பேரம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். பிரதிவாதிக்கு என் தாத்தா தான் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 11.04.2019 அன்று என் தாத்தா எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிதைவத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணம் எழுதிக்கொடுக்கும் போது என் தாத்தாவிற்கு வயது 93 என்றால் சரிதான். அதற்கு முன் 2 மாதத்திற்கு முன் பிரதிவாதி என் தாத்தா பிரதிவாதி எழுதிவைக்கும் போது அப்போது அவருக்கு வயது 93 தான். வா.சா.ஆ.1 ஆவணத்தை என் தாத்தா தான் தயார் செய்தார். அதில் என் மனைவி தான் சாட்சி கையெழுத்து போட்டார். ரவி என்ற இன்னோரு நபருக்கு சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்.

2) அந்த ஆவணத்தில் தன் மகன் மணிக்கு 45 போக மீதமுள்ள நிலத்தை என் பெயருக்கு எழுதிவைத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் செக்குபந்திகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால்

தெற்கு பக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவாவில் 4 எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு என் தாத்தா எழுதிவைத்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 4 எல்லைகள் என் தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.4 மூலமாக 03.10.2022ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் சொன்னதன் அடிப்படையில் தான் வழக்கறிஞர் அந்த அறிவிப்பை அனுப்பினார். வழக்கறிஞர் அறிவிப்பில் 2ம் பக்கத்தில் 1.26 ஏக்கர் நிலம் பிரதிவாதிக்கு ஆவண எண்.472/2019–ல் கொடுத்த சொத்தின் சுவாதீனம் பிரதிவாதி வசம் உள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு என் தாத்தா வா.சா.ஆ–1 மூலமாக கொடுத்த நிலம் விவசாய நிலம். என் தாத்தா எனக்கு கொடுத்த நிலத்தில் பயிர் வைத்தேன். பயிர் வைத்ததற்கான ரசீதுகள் என் வசம் உள்ளது ஆனால் அந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியவில்லை.

3) என்னுடைய வழக்கறிஞர் அறிவிபில் 3ம் பக்கத்தில் நான் 10 கி.மீ தொலைவில் வசிப்பதால் பிரதிவாதி என் நிலத்தின் தெற்குபுரம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் தாத்தா என்கது எழுதிகொடுத்த சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு இன்றைய தேதிவரை தெரியாது என்றாலும் நான் அங்கு சென்று பார்க்கவில்லை என்றாலும் அதனால் நான் அவ்வாறு வா.சா.ஆ.4 அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய அறிவிப்பில் பிரதிவாதியின் சொத்திற்கு பக்கத்தில் என் நிலம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் வில்லங்கம் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் ஆனால் அது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பது தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வில்லங்க சான்றிதழ் தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் தான். அதில் புருஷோதமன் எனக்கு எழுதிக்கொடுத்ததும் மற்றும் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விவரம் அதில் உள்ளது என்றால் சரிதான். **அது பி.வா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அது 2011 முதல் 2023 வரை விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில்

ஆவண எண்.441/2019 பற்றிய விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என் தாத்தா மற்றும், என் அப்பா, சித்தப்பா ஆகியோர் தாவா சொத்தை கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்து மீட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே ஆவணத்தில் என் தாத்தா கோலநாதநாயக்கருக்கு 17.03.1982 அன்று புல எண்.57/2–ல் 18 செண்ட் நிலம் கிரையம் கொடுத்தாக குறிப்பிடப்பட்டுளளது என்றால் சரிதான். 16.02.1984 அன்று புருஷோதமன் மற்றும் வையாபுரி ஆச்சாரி சேர்ந்து நாகம்மாளுக்கு புல எண்.57/2–ல் 36 செண்ட் ஆவண எண்.709/1984–ல் விற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) 20.10.2022 தேதியில் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு ஒரு மறுப்பு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் ரமேஷ்–ன் வழக்கறிஞர் என்று தவறுதலாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வழக்கறிஞர் என்னுடைய வழக்கறிஞருக்கு வா.சா.ஆ.6 மூலமாக ஒரு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் பிரதிவாதியின் நிலம் மற்றும் அதன் செக்குபந்திகள் குறிப்பிட்டு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்து புல எண்.57/2–லிருந்து பிரிக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்க விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.07.20 17:26:29 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.